THE NEW SUNDAY EXPRESS

# PM Modi to inaugurate two JIPMER facilities today

EXPRESS NEWS SERVICE
@ Puducherry

PRIME Minister Narendra Modi will dedicate to the nation JIPMER's Karaikal campus and the multi-speciality consulting unit in Yanam, through video-conferencing on Sunday, February 25.

The Karaikal campus of JIPMER was started in August 2016 at a temporary site with an annual intake of 50 students, an official statement read. Now, the campus stands on 67.33 acres, allocated by the Puducherry government. The first phase of the campus has been completed, this includes academic blocks, hostels for students and nurses, 154 residential units and other essential amenities, all at a cost of ₹491 crore. The second phase will include the establishment of a 500-bed hospital at a cost of about ₹450 crore; the works have been approved, they will be carried out soon and are expected to be completed in three years time. The release further added, this new facility will provide healthcare services not only t0 the people of Karaikal, but also the neighbouring regions of Tamil Nadu.

**Phase 2 of Karaikal campus in three years**

Second phase will include the establishment of a 500-bed hospital at a cost of ₹450 crore; works have been approved, they will be carried out soon and are expected to be completed in three years, the release said

Moreover, JIPMER's multi-speciality consulting unit at Yanam is also set to be inaugurated. Built at a cost of ₹91 crore, the facility is equipped with 90 beds, 20 ICUs and three operation theatres, spanning 0.9 acres provided by the Puducherry government. The hospital will focus on specialities and super specialities, including high-risk obsterics, surgery, orthopaedics, nephrology and non-invasive cardiology among others. OPD, ultrasound and laboratory services at the hospital began operations in December 2023, and the facility will be expanded as soon as more staff have been recruited, the release added.

Daily Thanthi Puducherry 25-2-2024

## காரைக்கால் ஜிப்மரில் 2-வது கட்டமாக

# ரூ.450 கோடியில் 500 படுக்கைகள் கொண்ட புதிய சிகிச்சை பிரிவு

புதுச்சேரி, பிப்.25-
காரைக்கால் ஜிப்மரில் 2-வது கட்டமாக 500 படுக்கைகள் கொண்ட சிகிச்சை பிரிவு ரூ.450 கோடி செலவில் கட்டப்பட உள்ளது.

புதுவை ஜிப்மர் இயக்குனர் ராகேஷ் அகர்வால் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

### காரைக்கால் ஜிப்மர்

கடந்த 2016-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் ஆண்டுதோறும் 50 எம்.பி.பி.எஸ் மாணவர்கள் சேர்க்கையுடன் தற்காலிக கட்டிடத்தில் ஜிப்மர் காரைக்கால் வளாகம் இயங்கி வருகிறது.

இதற்கு நிரந்தர வளாகம் அமைக்க புதுவை அரசு 67.33 ஏக்கர் நிலத்தை 2 கட்டங்களாக ஒதுக்கியது. முதல் கட்டத்தில் ரூ.405 கோடி கட்டுமான செலவு உள்பட 2 வளாகங்களுக்கான பொதுமேம்பாடு மற்றும் மருத்துவ கல்லூரிக்கான கல்விக் கட்டிடம், மாணவர்களுக்கான விடுதிகள், நர்சு விடுதிகள் மற்றும் 154 குடியிருப்பு கட்டிடங்கள் ஆகியவை ரூ.491 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளது. மருத்துவ கல்லூரிக்கான கல்வி கட்டிடம் 26 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் 5 தளங்களை கொண்டதாக உள்ளது.

### இன்று அர்ப்பணிப்பு

மேலும் எதிர்காலத்தில் கூடுதல் தளத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது 24 துறைகளை கொண்டுள்ளது. 2 வளாகங்களிலும் அனைத்து கழிவுகளும் வளாகத்திற்குள்ளேயே சுத்திகரிக்கும் வகையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. மறுசுழற்சி நீர் சுத்திகரிப்பு மற்றும் தோட்டக்கலை வேலைகளுக்காக பயன்படுத்தப்படும். மேலும் மழைநீர் சேகரிப்பு மற்றும் சூரியஒளி மின் உற்பத்திக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனை பிரதமர் மோடி இன்று (ஞாயிற்றுக்கிழமை) நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். 2-வது கட்டமாக 500 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை பிரிவு சுமார் ரூ.450 கோடி செலவில் கட்டுமான பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கி 3 ஆண்டுகளில் முடிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

# காரைக்கால், ஏனாம் ஜிப்மர் கட்டடங்கள் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார் பிரதமர்

ஜிப்மர் காரைக்கால் வளாக கட்டடம், ஏனாம் ஜிப்மர் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைப் பிரிவினை பிரதமர் மோடி இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

ஜிப்மர் காரைக்கால் வளாகம், ஆகஸ்ட் 2016 முதல் ஒவ்வொரு ஆண்டும் 50 எம்.பி.பி.எஸ். மாணவர்களுடன் தற்காலிக கட்டடங்களில் இயங்கி வருகிறது.புதுச்சேரி அரசு நிரந்தர வளாகத்தை அமைப்பதற்காக 67.33 ஏக்கர் நிலத்தை இரண்டு கட்டமாக ஒதுக்கியது.ஜிப்மர் காரைக்கால் கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா, 2021 பிப்ரவரியில் பிரதமரால் துவக்கி வைக்கப்பட்டது. இதன் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு இன்று 25ம் தேதி நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. பிரதமர் நரேந்திர மோடி அர்ப்பணிக்க உள்ளார். இதேபோல் ஏனாமில் அரசு பொது மருத்துவமனையில் ஜிப்மர் கடந்த 2021ம் ஆண்டில் ரூ.91 கோடி செலவில் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைப் பிரிவு அமைக்க முடிவு செய்தது. புதுச்சேரி அரசு வழங்கிய 0.9 ஏக்கர் நிலத்தில், 90 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை, 20 ஐ.சி.யூ.,படுக்கைகள் மற்றும் மூன்று அறுவை சிகிச்சை அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளார்.

**சிறப்பு என்ன:** காரைக்கால் ஜிப்மர் மருத்துவக் கல்லூரிக்கான கல்விக் கட்டடம், மாணவர்களுக்கான விடுதிகள், செவிலியர் விடுதிகள் மற்றும் 154 குடியிருப்பு கட்டடங்கள் ஆகியன, ரூ.491 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளது.மருத்துவக் கல்லூரிக்கான கல்விக் கட்டடம் 26,000 சதுர மீட்டர் பரப்பளவுடன் 5 தளங்களை கொண்டது. எதிர்காலத்தில் கூடுதல் தளத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது 24 துறைகளைக் கொண்டிருக்கும்.அனைத்து கழிவுகளையும் இரண்டு வளாகத்திற்குள் சுத்திகரிக்க கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மறுசுழற்சி செய்யப்பட்ட நீர் சுத்திகரிப்பு மற்றும் தோட்டக்கலை வேலைகளுக்காக பயன்படுத்தப்படும்.

தினகரன்
பிப்ரவரி 25, 2024 ஞாயிற்றுக்கிழமை

# காரைக்கால் ஜிப்மர் மருத்துவக்கல்லூரி இன்று திறப்பு

## பிரதமர் மோடி துவக்கி வைக்கிறார்



காரைக்கால், பிப். 25: காரைக்கால் ஜிப்மர் மருத்துவ கல்லூரி கட்டுமான பணிக்காக முதற்கட்டமாக ரூ.460 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஜிப்மர் மருத்துவமனை மற்றும் கல்லூரி அமைக்க 2016ம் ஆண்டு பணிகள் துவங்கியது. இரண்டு கட்டங்களாக பணிகள் நடந்து வந்தது. மருத்துவக் கல்லூரி, வகுப்பறைகள், உடற்கூறியல் உள்ளிட்ட ஆய்வகங்கள், டீன், அசிஸ்டன்ட் டீன் விடுதிகள், நிர்வாக கட்டிடம் மற்றும் மாணவ, மாணவிகள் தனித்தனியே தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

இது தவிர காரைக்கால் மேடு செல்லும் சாலையில் ஜிப்மர் மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள், ஊழியர்கள் தங்கும் விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக காரைக்கால் புதிய பேருந்து நிலையம் அருகே ஜிப்மர் மருத்துவமனை கட்டிடம் க்ட்டப்பட உள்ளது. அதே நேரத்தில் ஜிப்மர் மருத்துவக் கல்லூரியை வரும் கல்வி ஆண்டில் திறக்க வேண்டுமென பல்வேறு அரசியல் கட்சிகள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

காரைக்கால் ஜிப்மர் மருத்துவக்கல்லூரி திறப்பு விழா மற்றும் காரைக்கால் ஜிப்மர் மருத்துவமனை அடிக்கல் நாட்டு விழா இன்று நடைபெறுகிறது. இதில் ஜிப்மர் மருத்துவக் கல்லூரியை திறந்து வைத்தும், காரைக்கால் மற்றும் ஏனாம் பிராந்தியத்தில் கட்டப்பட உள்ள ஜிப்மர் மருத்துவமனை அடிக்கல் நாட்டு விழாவை பிரதமர் மோடி காணொலி வாயிலாக திறந்து வைக்கவுள்ளார். நிகழ்ச்சியில் ஒன்றிய சுகாதார துறை அமைச்சர் மஞ்சுக் மாண்டவியா, துணை நிலை ஆளுநர் தமிழிசை, முதல்வர் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதுமட்டுமில்லாமல் மதுரையில் தொடங்கவுள்ள 800 படுக்கைகள் கொண்ட எய்ம்ஸ் மருத்துவமனை போல் டெல்டா மாவட்டங்களில் முதல் முறையாக காரைக்காலில் 800 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக கட்டப்பட்டால் பொதுமக்கள் வரும் காலங்களில் புதுச்சேரி, சென்னை, டெல்லி போன்ற நகரங்களுக்கு செல்லாமல் காரைக்கால் ஜிப்மரில் தரம் வாய்ந்த சிகிச்சை பெற முடியும்.